தொழில்நுட்பத்தைப் பொறுத்த அளவில் பொறியாளர்களுடைய தொழில்நுட்ப விளக்கம் பெற்று, அதன் பின் அவர்களுக்கு அதற்குரிய அறிவுரையை வழங்கி, அதற்கேற்ப மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற பகுதிகளில் தேவை இருக்குமானால் நிச்சயமாக அரசு அதற்குரிய நடவடிக்கையை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம்.

திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதேபோன்று சீர்காழி தொகுதி, கொள்ளிடம்-மகேந்திரபள்ளி சாலை ஒருவழிச் சாலையாக இருக்கிறது, சுமார் 15 கிலோ மீட்டர் தூரம். அந்த ஒருவழிச் சாலையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இருவழிச் சாலையாக மாற்றிக் கொடுக்க முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சாலையை ஒருவழிச் சாலையிலிருந்து இடைவழித் தடமாகவோ, அல்லது இடைவழித் தடத்திலிருந்து இருவழித் தடமாகவோ மாற்றுகிறோம் என்று சொன்னால், அந்தச் சாலையினுடைய போக்குவரத்துச் செறிவுக் கணக்கைப் பொறுத்தது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்தச் சாலையினுடைய போக்குவரத்துச் செறிவைக் கணக்கில் எடுத்து, அதற்கேற்ப அந்தச் சாலையை அகலப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 67, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

67—

தேர்வு மையம்

***59666—திரு. பெ.சு. விஜயகுமார்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2009 பிப்ரவரி 26

(அ) போளூர் தொகுதி, கேளூர் மேல்நிலைப் பள்ளியைத் தேர்வு மையமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10—55

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பொதுவாக ஒரு பள்ளியைத் தேர்வு மையமாக அமைப்பதற்குக் குறைந்தபட்சம் 200 மாணவர்கள் இருக்க வேண்டும். ஆனால், கேளூர் மேல்நிலைப் பள்ளியில் 122 மாணவர்கள் மட்டுமே உள்ளனர். எனவே, அவ்வூரில் தேர்வு மையம் அமைக்க இயலவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார்.

திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூர் சட்டமன்றத் தொகுதி, கேளூரிலே நடைபெறுகின்ற அந்தப் பள்ளியில், ப்ளஸ் 1 வகுப்பிலே 167 மாணவர்களும், ப்ளஸ் 2 வகுப்பிலே 175 மாணவர்களும் இருக்கிறார்கள். அந்தப் பள்ளியிலே மொத்தம் 1,280 பேர் படிக்கிறார்கள்.

தமிழக அரசைப் பொறுத்தமட்டிலே, கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், அந்தப் பள்ளியைத் தரமுயர்த்தித் தந்தார்கள். இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே, அரசுக் கல்விக் கூடங்கள் என்பது, இன்றைக்கு மிகச் சிறந்த கல்விக் கூடங்களாக இருந்து கொண்டிருக்கின்றன. எனவேதான், என்னுடைய தொகுதியிலே இருக்கிற மாம்பட்டு பள்ளியிலும், செங்குணம் பள்ளியிலும் தொடர்ந்து 6 ஆண்டுகளாக நூற்றுக்கு நூறு சதவிகிதம் தேர்ச்சியைப் பெற்று வருகிறார்கள். அந்த அளவிற்கு இப்பொழுது பள்ளிக் கல்வித் துறை சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

என்னுடைய தொகுதியைச் சார்ந்த களம்பூர் பள்ளியிலே இருக்கின்ற மாணவர்கள் 13 கி.மீ. தூரம் சென்று, அங்கே பரீட்சை எழுதுகிறார்கள். எனவே, 175 மாணவர்கள் படிக்கின்ற அந்தப்

2009 பிப்ரவரி 26]

பள்ளியில் தேர்வு மையம் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1,280 மாணவர்கள் படிக்கின்ற அந்தப் பள்ளியிலே, 640 பெண்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அங்கே பெண்களுக்கென்று தனியாகப் பள்ளி வேண்டுமென்று 3 ஏக்கர் நிலத்தை வாங்கி, அரசாங்கத்திற்குத் தந்திருக்கிறார்கள். எனவே, அந்தப் பள்ளியை இரண்டாகப் பிரித்து, தனியாகப் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பள்ளியிலே இரண்டு இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. அந்தப் பணியிடங்களில் B.T. ஆசிரியர்களைப் போடுவதற்கு வாய்ப்பிருக்கிறது. எனவே, கணிதம், சரித்திரம் ஆகிய இரண்டு பாடங்களுக்கும் அங்கே ஆசிரியர்களைப் பணியமர்த்த வேண்டும்; Botany பாடத்திற்கு ஒரு ஆசிரியரை அமர்த்துவதற்கான ஆணையை அரசாங்கம் பிறப்பித்திருக்கிறது. ஆனால், இதுவரையிலே, அந்த ஆசிரியர் அங்கே வந்து பணியிலே சேரவில்லை. எனவே, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல, கேளூர் பள்ளியிலிருந்து மாணவர்கள் சுமார் 13 கி.மீ. தொலைவில் இருக்கக்கூடிய களம்பூர் பள்ளிக்குச் சென்றுதான் தேர்வு எழுதிக் கொண்டிருக்கிறார்கள். மூலக் கேள்வியிலே எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய விடையில் 122 மாணவர்கள் அங்கே இருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருந்தாலும்கூட, இப்போது 175 மாணவர்கள் ப்ளஸ் 2 வகுப்பிலே தேர்வு எழுதுகிறார்கள் என்ற தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே அளித்திருக்கிறார்கள். எனவே, அதனுடைய அடிப்படையிலும், நீண்ட தூரம் அவர்கள் செல்லக்கூடிய காரணத்தாலும், வருங்காலத்தில் நிச்சயமாகத் தேர்வு மையம் அமைத்துத் தருவதற்கு அரசு பரிசீலனை செய்யும்.

மற்றொன்று; ஏறத்தாழ 640 பெண்கள் அங்கே படிக்கக்கூடிய காரணத்தினால், அந்தப் பள்ளியை இரண்டாகப் பிரித்து, ஒரு மகளிர் உயர்நிலைப் பள்ளியை அமைக்க வேண்டுமென்றும் கோரியிருக்கிறார்கள். இந்த ஆண்டு புதிய பள்ளிகளை

உருவாக்குகிறபோது, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைக்கு நிச்சயமாக அரசு முன்னுரிமை அளிக்கும். காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களைக் குறித்தும் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்போது உங்களுக்குத் தெரியும்; மிக விரைவாக அனைத்துக் காலிப் பணியிடங்களையும் அரசு நிரப்பிக் கொண்டு வருகிறது. இடைநிலை ஆசிரியர்களைப் பொறுத்தமட்டிலே, இப்போது ஆசிரியர் தேர்வு வாரியத்தினால் விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டிருக்கின்றன. மாநிலப் பதிவு மூப்புரிமை அடிப்படையில், அனைத்துக் காலிப் பணியிடங்களும் இப்போது நிரப்பப்பட இருக்கின்றன. எனவே, இந்தக் கல்வி ஆண்டினுடைய இறுதிக்குள் அந்தப் பணியிடங்களை நிரப்புவதற்கு அரசு நிச்சயமாக ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார்.

திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பள்ளியிலே இருக்கின்ற ஆசிரியர்களுக்கு—பெண் ஆசிரியைகளுக்கு ஒரு கழிப்பறையும், இரண்டு சிறுநீர் கழிப்பறைகளும் இருக்கின்றன. ஆனால், அங்கேயிருக்கின்ற மாணவர்கள் 1,200 பேருக்கு, 10 பேர் மட்டுமே ஒரே நேரத்திலே சிறுநீர் கழிக்கின்ற அறை மட்டுமே இருக்கிறது. எனவே, அந்த அடிப்படை வசதியை மேம்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பள்ளியைப் பொறுத்தமட்டிலே, compound சுவர் இல்லை. எனவே, அந்தப் பள்ளிக்கு compound சுவர் அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பள்ளியிலே மேசை, நாற்காலி, பெஞ்சு எல்லாம் போதுமானதாக இல்லை; அவற்றையும் நிறைவேற்றித் தரவேண்டும். போளூரிலே இருக்கக்கூடிய அரசுப் பெண்கள் மேல்நிலைப் பள்ளியிலே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பெ.சு. விஜயகுமார், கேள்வி examination centre–ஐப் பற்றியது. நீங்கள் 'compound சுவர், கழிப்பறை' என்று பேசிக் கொண்டிருக்கிறீர்கள். சீக்கிரம் உரையை முடியுங்கள்.

திரு. பெ.சு. விஜயகுமார்: அரசு கனிவுடன் இந்தக் கோரிக்கைகளையெல்லாம் கவனிக்குமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

2009 பிப்ரவரி 26]

முற்பகல் 11–00

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவனிக்கப்படும் என்று தங்கள்வாயிலாக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி(*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்

(அ) பேரவைக் கூட்டம் முன்னதாக நிறைவுபெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

17–2–2009 அன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவின்படி பேரவையில் அலுவல்கள் இருப்பின், சட்டப் பேரவை *27–2–2009* அன்று வரை நடைபெறுவதாக இருந்தது. வேறு முக்கியமான அலுவல்கள் ஏதும் தற்போது இல்லாததால் அலுவல் ஆய்வுக் குழு உறுப்பினர்கள் அனைவரிடமும் இன்று கலந்து பேசி முடிவு செய்தபடி, இன்றுடன் (26–2–2009) சட்டப் பேரவைக் கூட்டம் நிறைவு பெறுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

3. தகவல் கோரல்

(அ) இலங்கைக் கடற்படையினரும், இராணுவமும் தமிழக மீனவர்கள்மீது தாக்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று *(26–2–2009)* எடுத்துக்கொள்ளப்படவிருக்கிற சிறப்புக் கவன ஈர்ப்புகள், (1) சிங்கள இராணுவமும், கடற்படையினரும் தமிழக மீனவர்கள்மீது அடிக்கடி தாக்குதல் நடத்துவது குறித்து, (2) 25–2–2009 அன்று அ.இ.அ.தி.மு.க. சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருக்குக் கொலை மிரட்டல்